www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# ஒன்பதாம் வகுப்பு – தமிழ்
# கற்றல் கையேடு - 2024-25

ஆக்கம்
ச.சேட்டு மதார்சா
ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா
உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு.அலைபேசி-8883681115

## பொருளடக்கம்

இயல் 1

இயல் 2

இயல் 3

இயல் 4

இயல் 5

இயல் 6

இயல் 7

இயல் 8

இயல் 9

விரிவானம்
கட்டுரை,கடிதம்,
அறிக்கைகள்
பலவுள் தெரிக

ச.சேட்டு மதார்சா



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## இயல்-1

**உரைநடை உலகம்: திராவிட மொழிக் குடும்பம்**

### குறு வினா விடை:

**1.நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?**

தமிழ் மொழி. திராவிட மொழிகள் வகையைச் சேர்ந்தது.

### சிறு வினா விடை:

**1.திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

தென் திராவிட மொழிகள்,வட திராவிட மொழிகள் , நடுத் திராவிட மொழிகள் ஆகியன திராவிட மொழிகள் பிரிவாகும்.

**எனக்குத் தெரிந்த மொழி : தமிழ்**

**அதன் சிறப்புகள் :** பழமையான இலக்கண- இலக்கியம் உடையது தமிழ். "ழ" என்னும் சிறப்பெழுத்தைக் கொண்டது.கூட்டெழுத்துகள் இல்லாத மொழி தமிழ் மொழி.

**2.மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிடமொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**

| | |
|---|---|
| மூணு - மலையாளம், | மூடு - தெலுங்கு, |
| மூரு - கன்னடம், | மூஜி -துளு. |

### நெடு வினா விடை:

**1.திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

சான்று:

கண் - தமிழ் , கண்ணு - மலையாளம், கன்னடம், கன்னு - தெலுங்கு , குடகு. ஃகன்-குரூக்.

திராவிடமொழிகளின் சொற்கள் பொதுவான அடிச்சொற்களைக் கொண்டுள்ளது.

சான்று:

மூன்று - தமிழ் , மூணு - மலையாளம், மூடு - தெலுங்கு, மூரு - கன்னடம், மூஜி -துளு.

திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒரே மாதிரியாகவே அமைந்துள்ளன.

மேற்கண்ட சான்றுகளில் உள்ள சொற்கள் காலப் பழமையான தமிழ் மொழியில் தான் முதலில் இடம்பெற்றுள்ளதைப் பார்க்கும் போது, திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை அறியலாம்.

### கவிதைப் பேழை: தமிழோவியம்

### குறுவினா விடை

**1.தமிழோவியம் கவிதையில் உங்களைக் கவர்ந்த அடிகள் குறித்து எழுதுக.**

"எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ் ஏந்தி வளர்த்தது தாயெனவே" என்ற அடி என்னைக் கவர்ந்த அடிகளாகும். இந்து, கிறித்துவம், இஸ்லாம் ஆகிய பல சமயங்களைத் தாயென வளர்த்தது தமிழே! என்பதை இத்தொடர் வழி அறியலாம்.

**2. அகமாய் புறமாய் இலக்கியங்கள் - அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்** இலக்கியங்களின் பாடுபொருளாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?

அகப்பொருள் , புறப்பொருள்

**3.உலகத்தாய்மொழி நாள் எது?** பிப்ரவரி 21

**4.தமிழை ஆட்சிமொழியாகக் கொண்ட நாடுகள் எவை?** இலங்கை , சிங்கப்பூர்

### சிறு வினா விடை

**1.காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக்கொள்கின்றது?**

அறிவியலால் இன்று பல துறைகள் வளர்ந்து வருகின்றன.சான்றாக"ஆக்ஸிஜன்" என்ற சொல்லிற்கு "உயிர்வளி"என்ற புதிய சொல்லாக்கத்தைத் தமிழில் உருவாக்க முடிகின்றது. இவ்வாறு காலந்தோறும் தமிழ்மொழி தன்னைப் புதுப்பித்துக் கொள்கின்றது.

**2.புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்களிப்பை விளக்குக.**

1.இன்றைய தேவைக்கான புதிய தமிழ்ச்சொற்களைச் சங்க இலக்கியங்கள் வழி வெளிக்கொணர்வோம்.

2.கணினித் தமிழச்சொற்களை ஆக்குவோம்.

3.தனித்தமிழ்ச் சொற்களைப் பெருகச் செய்வோம்.

### கவிதைப் பேழை: தமிழ்விடு தூது

### குறுவினா விடை

**1.கண்ணி என்பதன் விளக்கம் யாது?**

இரண்டு இரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலை கண்ணி. இரண்டு இரண்டு அடிகளை வைத்து எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் கண்ணி ஆகும்.

### நெடு வினா விடை

**1.தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.**

- ❖ முத்திக் கனியே! முத்தமிழே! உன்னோடு மகிழ்ந்து சொல்லும் விண்ணப்பம் உண்டு. கேள்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- புலவர்கள் குறும் , பள்ளு பாடி தமிழிடமிருந்து சிறப்பு பெறுகின்றனர். அதனால் உனக்கும் பாவகைக்கும் உறவு உண்டா?
- சிந்தாமணியாய் இருந்த உன்னைச் சிந்து என்று அழைப்பவர் நா இற்று விழும்.டே
- தவர்கள்கூட மூன்று குணங்கள். ஆனால் தமிழே! நீ மட்டுமே பத்து குணங்களைப் பெற்றுள்ளாய்!
- வண்ணங்கள் கூட ஐந்து தான். ஆனால் தமிழே! நீ மட்டுமே 100 வண்ணங்களைப் பெற்றுள்ளாய்!
- உணவின் சுவையோ ஆறு. ஆனால், தமிழே ! நீயோ ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்!
- மற்றையோர்க்கு அழகு ஒன்று தான் , ஆனால், தமிழே ! நீயோ 8 வகையான அழகினைப் பெற்றுள்ளாய்!

**விரிவானம் – வளரும் செல்வம்**

குறுவினா

1.கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச்சொற்களைத் தருக.

CPU-**மையச்செயலகம்** KEYBOARD-**விசைப்பலகை**
HARDWARE - **வன்பொருள்**SOFTWARE-**மென்பொருள்**
MOUSE-**சுட்டி**

**சிறுவினா**

**1.சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெறுகின்றது?**

எறிதிரை – எறுதிரான் கலன் – கலயுகோய்
நீர் – நீரியோஸ்,நீரிய தோணி – தோணீஸ்

**2.வளரும் செல்வம் உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச் சொற்களைத் தொகுத்து அதற்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

லேப்டாப் – மடிகணினி ப்ரௌசர் – உலாவி
சாப்ட்வேர் – மென்பொருள்
சைபர்ஸ்பேஸ் – இணையவெளி
சர்வர் – வையக விரிவு வலை

**கற்கண்டு : தொடர் இலக்கணம்.**

**1.செய் வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணை வினைகள் இரண்டினை எழுதுக.**

**1.உண் – சான்று :** கோவலன் **கொலையுண்டான்** ,
**2.ஆயிற்று – சான்று :** வீடு கட்டியாயிற்று.

**2.வீணையோடு வந்தாள் , கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.**

வேற்றுமைத்தொடர் , விளித் தொடர்.

**சிறு வினா விடை**

**தன்வினை , பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்தி காட்டுக.**

**தன்வினை:** வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை. எ.கா:அப்துல் வந்தான்

**பிறவினை:**
வினையின் பயன் எழுவாயை யன்றி பிறிதொன்றைச் சேருமாயின் அது பிறவினை. எ.கா.அப்துல் வருவித்தான்

இயல் -2

**உரைநடை உலகம் : நீரின்றி அமையாது உலகு**

**குறுவினா**

**1.கூவல் என்பதன் பொருள் யாது?**

உவர் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை.

**2.உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர் நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1.ஏரி 2.குளம் 3.வாய்க்கால் 4.கிணறு

**3.மணிநீரும் மண்ணும் மலையும் அணி நிழற் காடும் உடையது அரண். – இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?**

1.அகழிநீர் 2.நிலம் 3.மலை 4.காடு

சிறு வினா விடை:

**1.அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை – அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.**

- மரம் வளர்க்க வேண்டும்.
- மழைநீர் சேமிப்புத் தொட்டியில் மழை நீரைச் சேமிக்க வேண்டும்.
- தடுப்பணைகளை உருவாக்க வேண்டும்.

– இப்படிச் செய்தால் தான் அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

**2.சோழர் காலக் குமிழித் தூம்பு எதற்காகப் பயன்படுத்தப் பட்டது?**

தேவையான நீரை வெளியேற்றவும்,சேற்றை வெளியேற்றவும் சோழர் காலக் குமிழித் தூம்பு பயன்படுத்தப் பட்டது.

**நெடு வினா விடை:**

**3.நீரின்று அமையாது உலகு – என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரி.**

நீரின்று அமையாது உலகு என்றார் வள்ளுவர்.மனித வாழ்வுக்கு நீரே முக்கியம் ஆகும்!நாம் உண்ணும் உணவைத் தயாரிக்கவும், நெல்,தானியங்களை விளைய வைக்கவும், குடிப்பதற்கும் நீரே அவசியமாகும். மழை உழவுக்கு உதவுகிறது. விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

உடலைக் குளிர்விப்பதற்கும்,இறப்பு சடங்கிலும், வீட்டிற்கு வரும் விருந்தினர்களை நீர் கொடுத்து வரவேற்பதற்கும் , விவசாய நிலத்திற்கு உழைக்கச் செல்வோர் அதிகாலை நீராகாரம் குடிப்பதும் என அனைத்து செயல்களுக்கும் நீரே அவசியம்.

**கவிதைப்பேழை:பட்டமரம்**

**சிறு வினா**

**1.பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?**

- நிழல் கொடுத்தேன்.மலர் கொடுத்தேன்.
- பறவைகள் என் மீது அமர்ந்து பாடல் எழுதின.என் கிளை மீது ஏறி சிறுவர்கள் குதிரை விளையாடுவார்கள்.
- இவையெல்லாம் போய் இன்று இலைகள் எல்லாம் கருகிப்போய் மொட்டை மரமாய், பட்டமரமாய் போய்விட்டேன் என்று வருந்தியது.

**விரிவானம் : தண்ணீர்**

**முன்னுரை:**

கந்தர்வன் அவர்கள் எழுதிய சிறுகதை தண்ணீர். குடிநீர்ப் பிரச்சனையைப் பற்றி இக்கதை கூறுகிறது.

**தண்ணீர் பிரச்சனை**

அது ஒரு சிற்றூர். கிணறுகளில் தண்ணீர் இல்லை. மூன்று மைல் தூரம் நடந்து சென்று பிலாப்பட்டியில் தண்ணீர் பிடித்து வரவேண்டும்.பிலாப்பட்டி மக்கள் மதியம் வரை தண்ணீர் எடுப்பார்கள். பிறகு தான் வெளியூர்க் காரர்கள் பிடிக்க வேண்டும்.

**ரயிலில் தண்ணீர்**

குடிநீருக்கு ரயில் வண்டியில் பிடிக்கலாம் என்று ஊர்க்காரர்கள் முடிவு செய்தார்கள்.3 மணிக்கு வரும் பயணிகள் ரயிலில் தண்ணீர்ப் பிடிக்க முடிவு செய்தார்கள். இந்திராவும் மற்ற பெண்களும் குடங்களை எடுத்துக்கொண்டு புகைவண்டி நிலையம் நோக்கி ஓடுவார்கள்.

**இந்திரா**

ஒரு நாள் இந்திராவும் தண்ணீர்ப் பிடிக்க பெட்டியில் ஏறினாள்.தண்ணீர்ப் பிடிப்பதற்குள் வண்டி கிளம்பியது. வண்டியிலிருந்து குதித்துவிடலாம் என்று நினைத்து போது வடக்கத்தியப் பெண் , இவள் தற்கொலைக்கு முயல்வதாக நினைத்து பெட்டிக்குள் இந்திராவை இழுத்துவிடுகிறாள்.

**குடும்பம் தேடுதல்**

இந்திரா வண்டியோட போய்ட்டா என்று அலறி அடித்து அம்மா , ஐயா, சின்னவன் , உறவினர் , ஊர்க்காரர்கள் தேடிச் சென்றார்கள்.இந்திராவின் அம்மா நானும் சாகிறேன் என்று ஓட இந்திரா குடத்தைக் தூக்கிட்டு வருகிறாள். மகளே இவ்வளவு நடந்தும் இத சுமந்து வரனுமா என்று ஐயா கூற, நாளைக்கு வரைக்கும் தண்ணிக்கு எங்கப் போறது என்றாள் இந்திரா.

**முடிவுரை:**

தண்ணீர் இல்லை எனில் கண்ணீர் தான் என்பதை உணரமுடிகின்றது.

**பெரியபுராணம்**

**குறுவினா**

**1.நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?**

எருமைகள் நீரில் விழுவதால் நீரில் உள்ள வாளை மீன்கள் அருகில் உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும் காட்சிக்கு ஒப்பிடுகிறது.

**நெடு வினா விடை**

**பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.**

- வண்டுகள் மொய்க்கும் பூக்களோடு காவிரி நீர் வாய்க்கால்களில் பாய்கிறது.
- நாற்றின் முதல் சுருள் விரிந்ததை வைத்து,பருவம் அறிந்து களை பறித்தனர்.
- கரும்புகள் ,குவளை மலர்கள், சங்குகள் , அன்னங்கள்,எருமைகள் அனைத்தும் நீர்நிலைகளில் காணப்படுகிறது.
- மீன்கள் , முத்துக்கள் ,மலர்கள் ஆகியவை திருநாட்டில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.
- தென்னை மரம்,அரச மரம்,பனை மரம்,சந்தன மரம் ஆகியன திருநாட்டில் வளர்ந்தன.

**புறநானூறு**

**குறுவினா வினாவிடை**

**1."உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" பொருள் விளக்கம் தருக.**

உணவைத் தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவர்.

**சிறு வினா-விடை**

**நிலைத்த புகழ் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?**

- உணவைத் தந்தவர். உயிரைத் தந்தவர்
- உணவு என்பது நீரையும் நிலத்தையும் சார்ந்தது.
- குழியான நிலம் உள்ள இடங்களில் எல்லாம் நீரைப் பெருகச் செய்ய வேண்டும்.

**இயல் - 3**

**ஏறுதழுவுதல்**

**1.ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.**

1.ஏறுகோள் 2.எருதுகட்டி

**2.ஏறுதழுவுதல் குறித்து தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிடுக.**

- சேலம்,கரிக்கையூர்,
- கல்லூத்துமேட்டுப்பட்டி,சித்திரக் கல் புடவு.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**சிறுவினா விடை**

**1.வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.**

ஏறுதழுவுதல் முல்லை மக்களின் அடையாளம் ஆகும். உழவுத் தொழிலுக்கும் போக்குவரத்திற்கும் ஏறு பயன்பட்டது.

**2. ஏறுதழுவுதல் திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்துள்ளது?**

- முல்லை – ஏறுதழுவுதல்
- மருதம் – உழவுக்கு மாடுகள் பயன்படுதல்
- பாலை – போக்குவரத்துக்கு மாடுகள்.

நெடு வினா விடை

**1.ஏறுதழுவுதல் தமிழரின் அரசியல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விளக்குக.**

- காளைச் சண்டை ஸ்பெயினின் நாட்டின் தேசிய விளையாட்டு.
- அங்கு காளையைக் கொல்பவன் வீரன்.
- தோற்றாலும் வென்றாலும் காளைகள் சில இடங்களில் கொல்லப்படும்.
- ஆனால் தமிழ்நாட்டில் காளைகளுக்கு எந்தத் தீங்கையும் ஏற்படுத்தக்கூடாது.
- வெற்றிபெற்ற காளைக்கும் பரிசளிப்பு செய்வர்.

**2. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.**

- ✓ விலங்குகளை முன்னிலைப் படுத்தவும் நம் முன்னோர்கள் ஏறுதழுவுதலைப் பண்பாட்டுக் கூறாகக் கொண்டிருந்தனர்.
- ✓ நாகரிகம் என்ற பெயரில் நாம் அதனை ஒதுக்காமல் அந்நிகழ்வுகளைச் செய்தல் வேண்டும்.
- ✓ ஏறுதழுவுதல் பற்றி நம் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

**மணிமேகலை**

**1.'பழ மணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின்' இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்**

**மணிமேகலையில் முரசு கொட்டியவன் கூறியது.**

**விளக்கம்**

**அனைத்து இடங்களிலும் பழைய மணலை மாற்றி புது மணலைப் பரப்புங்கள்.**

**2.பட்டிமண்டபம் –பட்டிமன்றம் இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.**

**இரண்டும் ஒன்றே! பட்டிமண்டபம் என்பது காலப்போக்கில் பட்டிமன்றம் என மாறியது.**

**3.ஐம்பெரும் குழுக்களில் உள்ளவர் யாவர்?**

**1.அமைச்சர் 2.சடங்கு செய்விப்போர் 3.படைத்தலைவர் 4.தூதர் 5.ஒற்றர்**

**சிறுவினா விடை**

**3.உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.**

- தெருக்களை சுத்தப்படுத்தி ,சுவர்களில் சுண்ணாம்பு அடித்து ,தோரணம் கட்டி கோலம் போட்டனர்.
- இதைப்போல தெருக்கள், மன்றங்கள் ஆகியவற்றில் இந்திர விழாவின் போது அழகுபடுத்தினர்.
- திருவிழாவில் பாட்டுக் கச்சேரி நடக்கும். இந்திர விழாவில் பட்டி மண்டபம் நடக்கும்.

**வல்லினம் மிகும்இடங்கள்**

**1.வல்லினம் மிகுதல் என்றால் என்ன?**

க,ச,த,ப என்பது சொல்லின் முதலில் வரும். இவை நிலை மொழியுடன் சேரும்போது மெய்யெழுத்துகள் தோன்றி சேரும். இதனை வல்லினம் மிகுதல் என்பர்.

**சிறு வினா விடை**

**தற்கால தமிழ் உரைநடையில் வல்லினம் மிகும் இடங்களைக் குறிப்பிடுக.**

- அ ,இ என்ற சுட்டு எழுத்திலும் ,
- அந்த இந்த என்ற சுட்டுப் பெயரிலும் வல்லினம் மிகும்

சான்று : அச்சட்டை , இந்தக் கொடி

**அகழாய்வுகள்**

**1.தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும் ஏன்?**

தமிழரின் பழமையை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காக தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும்.

**விரிவானம்-அகழாய்வுகள்**

**முன்னுரை**

அகழாய்வுகள் குறித்த செய்திகளைக் காண்போம்

**அரிக்கமேடு அகழாய்வு**

- அரிக்கமேடு அகழாய்வில் முதல் நூற்றாண்டைச் சேர்ந்த கட்டிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- அதில் ரோமானிய மண்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**ஆதிச்சநல்லூர் அகழாய்வு**

- ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- இது பழங்காலத்தின் அடையாளமாக உள்ளது.

**கீழடி அகழாய்வு**

- மதுரையில் கீழடி என்ற இடத்தில் அகழாய்வு நடத்தப்பட்டது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- கீழடி அகழாய்வு சுடுமண் பொருட்கள் உலோகப் பொருட்கள் முத்துக்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

அகழாய்வுகள் மூலம் தமிழரின் பெருமையை அறியலாம்.

**திருக்குறள்**

**1.நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?**

நம்மை இகழ்பவரிடம் நிலம் போலப் பொறுமை காக்க வேண்டும்.

**2.தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும்.- இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.**

தீயவை தீயவையே தரும். அதனால் அவற்றை செய்ய அஞ்ச வேண்டும்.

**3.ஒற்றொற்றி.... இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக**

மோனை: ஒற்றொற்றி-ஒற்றினால் -ஒற்றிக்

எதுகை: ஒற்றொற்றி-ஒற்றினால் -ஒற்றிக்

**4.கனவிலும் இனிக்காது எவர் நட்பு?**

சொல்லும் செயலும் வேறு வேறு உள்ளவர் நட்பு கனவிலும் இனிமை தராது.

**இயல் – 4**

**இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்**

குறுவினா விடை

1.இணையவழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

- தொலைநகல் இயந்திரம்
- தானியக்கப் பண இயந்திரம்
- அட்டைப்பயன்படுத்தும் இயந்திரம்.
- திறனட்டைக்கருவி
- ஆளறிசோதனைக் கருவி

**சிறு வினா விடை**

**1.பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக**

- கல்வி உதவித்தொகை தேர்வினை இணையம் மூலம் பள்ளியிலேயே விண்ணப்பிக்கலாம்.
- 10 மற்றும் 12ம் வகுப்பு முடித்தவர்கள் , அவர்கள் பள்ளியிலேயே அரசு வேலைவாய்ப்பகப் பதிவினைச் செய்யலாம்.
- விலையில்லாமிதிவண்டி , மடிக்கணினி பெற்றவர்களின் விவரங்கள் இணையம் மூலம் கணினியில் பதிவேற்றம் செய்யப்படுகின்றது.

**நெடு வினா விடை**

**1.அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.**

**அட்டைப் பயன்படுத்தும் இயந்திரம்:**

- பொருள் வாங்கவும் மற்ற வணிகப் பரிமாற்றங்களுக்கும் இந்தக் கருவி பயன்படுகின்றது.
- இந்த இயந்திரத்தில் அட்டையைத் தேய்க்கும் போது அது இணையத் தொடர்பின் மூலம் வங்கிக் கணினிக்குச் செல்கிறது.
- கணினியால் அட்டை ஆராயப்பட்டுக் கடவுச்சொல் சரிபார்க்கப்பட்டு பணப்பரிவர்த்தனைக்கு வங்கி ஒப்புதல் அளிக்கின்றது.

**திறன் அட்டைக் கருவி:**

- குடும்பஅட்டைகள் திறன்அட்டை ஆக்கப்பட்டுள்ளது.
- குடும்பத்தில் உள்ளவர்களின் விவரங்கள் சேர்த்து திறன்அட்டைகள் வழங்கப்படுகின்றன.
- திறன்அட்டை விற்பனைக்கருவியில் வருடப்படுகின்றன.
- அங்கு விற்பனை செய்யப்படும் விவரங்கள் குறிப்பாக பதிவு செய்யப்பட்டு அலைபேசிக்குக் குறுஞ்செய்தியாக வரும்.

**ஓ என் சமகாலத்தோழர்களே!**

**1.கூட்டுப் புழுவை எடுத்து காட்டி கவிஞர் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக. (குறுவினா)**

பொறுமை , அடக்கம்

**2. “ஓ! என் சமகாலத் தோழர்களே!” கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?(சிறுவினா)**

- அறிவியல் வாகனத்தில் தமிழை ஏற்ற வேண்டும்.
- கரிகாலன் புகழை கணினியில் கொண்டு வரவேண்டும்.
- ஏவுகணைகளில் தமிழை எழுதி அனைத்து கோள்களிலும் ஏற்ற வேண்டும்.

**உயிர்வகை**

**1.மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே இவற்றில் தொல்காப்பியர் குறிப்பிடும் மூவறிவு, நான்கறிவு , ஐந்தறிவு உயிர்கள் யாவை? (குறுவினா)**

மூவறிவு –கரையான்,எறும்பு

நான்கறிவு –வண்டு,தும்பி

ஐந்தறிவு –பறவை ,விலங்கு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2.அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்? (சிறுவினா)**

- தொடு உணர்வால் அறிவது ஓரறிவு உயிர்கள்.
- தொடுதல் – சுவை அறிவது. ஈரறிவு உயிர்கள்.
- தொடு உணர்வு –சுவை –முகர்தல் அறிவது மூவறிவு உயிகள்.
- இவற்றோடு காணுதல் நான்கறிவு உயிர்கள்.
- இவற்றோடு ஐந்தறிவு உயிர்கள்.
- இவற்றோடு மனதால் அறிவது ஆறறிவு உயிர்கள்.

### விண்ணையும் சாடுவோம்

**1.செயற்கைக் கோள் ஏவு ஊர்தியில் பொருத்தும் செயலியை பற்றி திரு. சிவன் கூறுவது யாது?குறுவினா**

- சித்தாரா செயலி
- வானிலையின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்.

**2.மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைகோளின் பங்கு யாது?(சிறுவினா)**

1.விளைச்சல் கண்டறிதல்
2.நீரின் அளவு கண்டறிதல்
3.மீன்கள் கிடைக்கும் இடத்தை சொல்லுதல்
4.திறன்பேசி
– ஆகியவற்றிற்கும் செயற்கைக்கோள் பயன்படுகிறது.

**நெடுவினா**

**இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.**

**முன்னுரை**

இந்தியா விண்வெளியை ஆய்வு செய்வதற்காக விண்வெளித் துறையை உருவாக்கியது.அதன் சாதனைகளைக் காண்போம்.

**இந்திய விண்வெளித்துறை**

- இந்திய விண்வெளி ஆய்வு மையம் பெங்களூரில் உள்ளது.
- திரு.கே. சிவன் இதன் தலைவராக இருந்தார்.
- குறைந்த செலவில் நிறைந்த சேவைத் தருகின்றது.
- உலகிலேயே மிகப்பெரிய விண்வெளி மையத்தில் ஆறாவது இடம் பெற்றுள்ளது.

**சாதனைகள்**

- இதுவரை 40 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.
- 1.ஆரியபட்டா 2.ரோகினி 3.சந்திராயன்–1 ஆகியவை விண்ணில் ஏவப்பட்டது.
- நேவிக் செயலியைக் கண்டுபிடித்துள்ளது.

**முடிவுரை**

இந்திய விண்வெளித்துறை அளப்பற்ற சாதனைகளைச் செய்துள்ளது..

### வல்லினம் மிகா இடங்கள்

தற்கால உரைநடையில் வல்லினம் மிகா இடங்களைக் கூறுக

- அது – இது என்னும் சொல்லில் வல்லினம் மிகாது.
- எது– எவை என்னும் சொல்லில் வல்லினம் மிகாது.

இயல்- 5

## கல்வியில் சிறந்த பெண்கள

**குறு வினா விடை**

**1. சாரதா சட்டம் எதற்காக போடப்பட்டது?**
குழந்தைத் திருமணத்தை தடுப்பதற்காக **சாரதா** சட்டம் போடப்பட்டது

**சிறு வினா விடை**

**1. சங்கப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.**
அவ்வையார் ,ஆதிமந்தியார், பொன்முடியார்,வெள்ளிவீதியார்.

**2.இன்றைய பெண் கல்வி என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக.**
தந்தனத்தோம் என்று சொல்லியே!
வில்லினில் பாட! ஆமாம் வில்லினில் பாட!
படிக்க வைப்போம் !பெண்களைப் படிக்க வைப்போம்!
பெண்கல்வி வாழ்க! பெண்கல்வி!

**3.மருத்துவர் முத்துலட்சுமியின் சாதனைகளை குறிப்பிடுக.**

- தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.
- அடையாறில் அவ்வைஇல்லம்,புற்றுநோய் மருத்துவமனை நிறுவினார.
- பெண்களுக்கு சொத்துரிமைச் சட்டத்திற்குப் பாடுபட்டார்.

**4.நீலாம்பிகை அம்மையார் தமிழ் பணி குறித்து எழுதுக.**
தனித்தமிழ் கட்டுரை ,வடசொல் தமிழ் அகராதி , முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார்பாராட்டிய மூவர் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

**நெடு வினா விடை**

**1. நீங்கள் அறிந்த சாதனை பெண்கள் குறித்த செய்திகளை எ முதுக**

**மருத்துவர் முத்துலட்சுமி**

- தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.
- அடையாறில் அவ்வைஇல்லம்,புற்றுநோய் மருத்துவமனை நிறுவினார.
- பெண்களுக்கு சொத்துரிமைச் சட்டத்திற்குப் பாடுபட்டார்.

**நீலாம்பிகை அம்மையார்**

தனித்தமிழ் கட்டுரை ,வடசொல் தமிழ் அகராதி ,முப்பெண் மணிகள் வரலாறு,பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

## குடும்ப விளக்கு

குறு வினா விடை

1.தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது? பெண் கல்வி

**சிறு வினா விடை**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

1. சமைப்பது தாழ்வா இன்பம் சமைக்கின்ற சமையல் செய்வார்.

**1.இன்பம் சமைப்பவர் யார்?** உணவைச் சமைப்பவர்

**2.பாவேந்தர் கூற்றுபடி சமைப்பது தாழ்வா?**

இல்லை

**நெடு வினா விடை**

**1.குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண் கல்விக்கான கருத்துக்களை இன்றைய சூழலில் ஒப்பிடுக.**

கல்வியறிவில்லாத பெண்கள் பயன்படாத நிலம் போன்றவர்கள்.

கல்வியறிவு இல்லாத பெண்களின் குழந்தைகள் தீய பழக்கங்கள் செய்கின்றனர்.

கல்வி அறிவுள்ள பெண்கள் நல்ல நிலத்தை போன்றவர்கள். இன்று கல்வி கற்ற பெண்களின் குழந்தைகள் பலர் நல்ல பழக்கங்களை கற்றுஉயர்ந்து இருக்கின்றனர்.

**சிறுபஞ்சமூலம்**

குறுவினா

**1.மூவாது மூத்தவர் , நூல் வல்லார் – இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.**

நன்மை , தீமையை இளமையிலேயே உணர்ந்தசிறியவர்கள் மூத்தவரோடு வைத்து நினைக்கத் தக்கவர் ஆவர்.

**சிறுவினா**

**1.விதைக்காமலே முளைக்கும் விதைகள் – இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.**

- பூக்காமல் காய்க்கும் மரங்கள் காய்ப்பது போல்நன்மை, தீமையை இளமையிலேயே உணர்ந்த சிறியவர்கள் மூத்தவரோடு வைத்து நினைக்கத் தக்கவர் ஆவர்.
- விதைக்காமலே முளைக்கும் விதைகள் போல அறிவுநுட்பம் மிகுந்தவர் பிறர் உணர்த்தாமல் தாமே எதனையும் உணர்ந்து கொள்வர்.

**வீட்டிற்கோர் புத்தகசாலை**

குறு வினா விடை

1.நீங்கள் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?

1.திருக்குறள் 2.மணிமேகலை

2.அண்ணாவின் புகழ் பெற்ற பொன்மொழிகள் உனக்கு பிடித்தமான பற்றி எழுதுக.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

**நெடுவினா**

**நூலகம் நூல்கள்குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?**

முன்னுரை

நூலகம் நூல்கள் குறித்து அண்ணா கூறியுள்ளவற்றைக் காண்போம்.

நூலகம்

- சிறிய கடை அளவிற்கு உடைகளையும் மருந்துகளையும் வைத்துஇருக்கிறோம்.
- அடிப்படைத் தேவைக்கு அடித்தபடியாக நூலகம் வீட்டில் இருக்க வேண்டும்
- ஆனால் நாம் நூலகத்தை வீட்டில் வைத்திருப்பதில்லை.
- வீட்டில் நூலகம் அமைக்க வேண்டும்

நூல்கள்

- வரலாறு , புவியியல், அறிவியல் கண்டுபிடிப்புகள்,அறிஞர்கள் ஆகிய நூல்கள் வீட்டுநூலகத்தில் வைக்கவேண்டும்.
- திருக்குறள் வீட்டில் கட்டாயம் இருக்க வேண்டும்.
- தலைவர்கள் பற்றிய நூல்கள் இருக்க வேண்டும்.

முடிவுரை

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூலகம் வைக்க வேண்டும்.

## இடைச்சொல்,உரிச்சொல்

**1.தான் என்னும் இடைச்சொல்லை எப்படி எல்லாம் பயன்படுத்தலாம்?**

அழுத்தப் பொருளில் பயன்படுத்தலாம்.

சான்று – நிர்மலா தான் பாடினாள்

**2.செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருள்களில் இடம் பெறுகின்றன?**

1.ஒரு சொல் பல பொருள்

2.பல சொல் ஒரு பொருள்

## இயல்-6

**சிற்பக்கலை**

**குறு வினா**

**1.செப்புத் திருமேனிகள் பற்றிக்குறிப்பு வரைக.**

சோழர் ஆட்சியில் அதிகமான செப்புத் திருமேனிகள் உருவாக்கப்பட்டன. கடவுளின் வடிவங்களும் மிகுந்த கலை நுட்பத்தோடு இதில் வடிவமைக்கப்பட்டன. சோழர்காலம் செப்புத் திருமேனிகள் காலம் என்பர்.

**2.நடுகல் என்றால் என்ன?**

போரில் மார்பில் புண் பட்டு இறந்த வீரருக்குக் கல்லில் வீரரின் உருவம் பொறிக்கப்பட்டு நடுவது நடுகல் ஆகும்.

**3.இசைத் தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டன?**

விஜய நகர மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்டன

**சிறுவினா**

1.முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

| முழு உருவச் சிற்பங்கள் | புடைப்புச் சிற்பங்கள |
|---|---|
| முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்கள் முழு உருவச்சிற்பங்கள். | உருவத்தின் முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள். |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

2.நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

- ❖ கோவை பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலைநுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு எனலாம்.
- ❖ விழியோட்டம் , புருவ நெளிவு , நகஅமைப்பு என மிகமிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை அமைக்கப்பட்டுள்ளன.

## நெடு வினா

1.தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலை நயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

மாமல்லபுரச் சிற்பங்கள் பெரும்பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பஞ்சபாண்டவர்கள் இரதத்தில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் அழகாக உள்ளன.

தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படும் 14 அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும் , நந்தியும் வியப்பூட்டும் படி உள்ளது.

நாயக்கர் மன்னர்கள் சிற்ப வேலைப்பாடுடன் ஆயிரங்கால் மண்டபத்தை அமைத்தனர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரம் கால் மண்டபத்து தூண்களில் கண்ணப்பர்,குறவன்,குறத்தி, ஆகியவற்றில் ஆடை ஆபரணங்கள் கலைநயத்துடன் காணப்படுகின்றன.

கோவை பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் விழியோட்டம் , புருவ நெளிவு , நகஅமைப்பு என மிகமிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை அமைக்கப்பட்டுள்ளன.

# இராவண காவியம்

## குறு வினா

**1.பாலை நிலத்தில் பருந்துகள் பறந்த தன் காரணம் என்ன?**

குழந்தைகள் பாலைக் காயைப் போட்டு அடிக்கும் சத்தம் கேட்டு பருந்துகள் பறந்தது.

**2. இடிகுரல், பெருங்கடல் இலக்கணக் குறிப்பு தருக.**

இடிகுரல் – உவமைத்தொகை

பெருங்கடல் –பண்புத்தொகை

## சிறுவினா விடை

**1.இராவண காவியத்தில் இடம் பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக் காட்டுக.**

1.பாலைக்காய் வெடிப்பதைக்கேட்டு பறவைகள் பயந்து ஓடுகின்றன.

2.தும்பி கடற்கரையில் சிறகைக் காய வைத்துவிட்டு பெண்கள் முகத்தை நோக்கி செல்லும்.அது நிலா மேகத்தை நோக்கி செல்வதைப்போலஇருக்கும்.

**2. குறிஞ்சி மணப்பதற்காக நிகழ்வுகளை குறிப்பிடுக.**

சந்தன மர குச்சி, அகில் ,நெல்லரிசி சோறு, காந்தள் மலர் ஆகியவற்றால் குறிஞ்சி மணக்கிறது.

# நாச்சியார் திருமொழி

## குறு வினா விடை

**1.கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?**

கண்ணன் புகுந்த பந்தலில் முத்துமாலைகள் தொங்க விடப்பட்டிருந்தது.

## சிறுவினா விடை

**1.ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக**

- ❖ பெண்கள் கலசத்தையும் விளக்குகளையும் ஏந்தி வர கண்ணன் பாதுகை அணிந்து நடந்துவருகிறார்.
- ❖ இசைக்கருவியும் சங்கு முழங்க முத்துடைய பந்தலில் கண்ணன்வருகிறார்.

## விரிவானம் : செய்தி

**1.இசைக்கு நாடு , மொழி , இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி'க் கதையின் மூலம் விளக்குக.**

**முன்னுரை**

**இசைக்கு நாடு , மொழி , இனம் தேவையில்லை என்பதை இக்கதையில் காண்போம்.**

**செய்தி**

- ❖ இசை நிகழ்ச்சியில் தமிழ்நாட்டு நாதசுவர வித்வானும் பிலிப் போல்ஸ்கா என்ற வெளிநாட்டுக் கலைஞரும் வந்திருந்தனர்.
- ❖ நாதஸ்வர வித்வான் வாசிக்கத் தொடங்கினார். நாதஸ்வர இசை ஆரம்பித்தது.
- ❖ போல்ஸ்கா தன்னையே இழந்து இரசிக்கின்றார். வித்துவானின் சாமாராகம் அனைவரையும் மயங்கச் செய்தது.
- ❖ வித்வானிடம் சாந்தமுலேகாவை பல முறை வாசிக்கக் கேட்டு மகிழ்ந்தார்.
- ❖ இதில் ஒரு செய்தி இருப்பதாகவும் , ஏதோ ஒரு உலகத்தில் இருந்து வந்த செய்தி கேட்கிறது என்றார் போல்ஸ்கா.
- ❖ அது தமிழ் இசையின் செய்தி. வேறு எந்த இசையும் இதனைக் கொடுக்கவும் இல்லை.அதனை நான் வாங்கிக் கொண்டேன்.

**முடிவுரை**

**இக்தை இசைக்கு நாடு , மொழி , மதம் என எதுவும் இல்லை என்பதை உணர்த்துகிறது.**

## புணர்ச்சி

**1.புணர்ச்சி என்றால் என்ன?**

நிலைமொழியும் வருமொழியும் சேருவது புணர்ச்சி.

**2.கைபிடி, கைப்பிடி சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின்** புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

1.கைப்பிடி– இயல்பு புணர்ச்சி

2.கைப்பிடி –விகாரப்புணர்ச்சி

# திருக்குறள்

**1.இறக்கும் வரை உள்ள நோய் எது?**

சொன்னாலும் செய்யாமல் தானாகவும் செய்யாதவன் உயிர்.

**2.உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?**

உழவர் அனைவரையும் தாங்கி நிற்பவர் அவரே.

# இயல் – 7

## குறு வினா

1.இந்திய தேசிய ராணுவத்தில் குறிப்பிடத்தகுந்த தமிழர்கள் யாவர்?

**1.பசும்பொன் முத்துராமலிங்க தேவர்**

**2.ஜானகி 3.ராஜாமணி**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2.தாய் நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள் ஏன்?**

**ஆசிரியர் பணியைத் தேர்ந்தெடுப்பேன்.**

**காரணம் : நல்ல தலைவர்களை நாட்டிற்கு உருவாக்கித் தருவேன்.**

**3.'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?**

**1943இல் நேதாஜியால் செய்யப்பட்டது**

## சிறு வினா

**1.குறிப்பு வரைக." டோக்கியோ கேடட்ஸ்"**

**45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு வான்படை தாக்குதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட பயிற்சி பிரிவின் பெயர் டோக்கியோ கேடட்ஸ்.**

**2.பனியிலும் மழையிலும் எல்லை காக்கும் இந்திய வீரர்களின் பணியைப் பாராட்டி உங்கள் கையெழுத்து இதழுக்கு ஒரு துணுக்குச் செய்தி எழுதுக.**

**தன்னையும் தன்னுடைய குடும்பத்தையும் மறந்து தன் நாட்டையும் தன் நாட்டு மக்களையும் காப்பாற்றுவதற்காகவே உழைக்கும் நல்ல உள்ளங்கள் ராணுவ வீரர்கள் அவர்களைப் போற்றி வணங்குகின்றோம்.**

## சீவகசிந்தாமணி

### குறு வினா

**1.கருக்கொண்ட பச்சைப் பாம்பு எதற்கு உவமையாக கூறப்பட்டுள்ளது?**

**நெற்பயிரின் தோற்றம்**

**2.ஐம்பெரும் காப்பியங்கள் யாவை?**

**1.சிலப்பதிகாரம் 2.மணிமேகலை 3.சீவக சிந்தாமணி 4.வளையாபதி 5.குண்டலகேசி**

### சிறுவினா

**1.ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்?**

- ❖ உணவுகள்
- ❖ அறச்சாலைகள்
- ❖ ஒப்பனை மணிமாடம்
- ❖ கம்மியர்
- ❖ திருமணங்கள்

## முத்தொள்ளாயிரம்

### குறுவினா

**1.அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவில - இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?**

சேறு - அள்ளல் வயல் - பழனம்

**2.கொற்கை நகரில் முத்துக்களைப் போல உள்ள பொருள்களாகக் காட்டப்படுவன எவை?**

சங்குவின் முட்டைகள்,புன்னை மொட்டுக்கள்,பாக்குப் பாளையில் இருந்து சிந்தும் மணிகள்.

### சிறு வினா விடை

**1.சேர , சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.**

**சேரர் :** வயல்களில் ஆம்பல் மலர்ந்தன. அதனைக் கண்ட நீர்ப்பறவைகள் தண்ணீர் தீப்பிடித்து விட்டது என்று நினைத்து தம் குட்டிகளைச் சிறகில் மறைத்து வைத்தன. சேர நாட்டில் இந்த அச்சமும் இருக்கின்றது.

**சோழர்:** உழவர்கள் நெற்போர் மீது ஏறி 'நாவலோ' என்று கூவி மற்ற உழவர்களை அழைப்பர்.இது போரில் யானை மீது நின்று 'நாவலோ' என்று கூவி மற்ற வீரர்களை அழைப்பது போல் இருந்தது. இத்தகு வளம் சோழ நாட்டில் காணப்பட்டது.

**பாண்டியர்:** கொற்கை நகரில் முத்துக்களைப் போல சங்குவின் முட்டைகள் , புன்னை மொட்டுக்கள் , பாக்குப் பாளையில் இருந்து சிந்தும் மணிகள் ஆகியவை இருந்தன. இத்தகைய வளம் பாண்டியர் நாட்டில் காணப்பட்டது.

**2.தற்குறிப்பேற்றவணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**இலக்கணம்**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் மனக்கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்றவணி.

**சான்று:**

" அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாய... ..."

**விளக்கம்:**

இயல்பான நிகழ்வு : வயலில் ஆம்பல் மலர்தல் .

கவிஞர் மனக்கருத்து : நீர்பறவைகள் வெள்ளத்தில் தீப்பற்றியதாக வருந்தி தன் குஞ்சுகளைக் காத்தல்.

எனவே இது தற்குறிப்பேற்றவணி ஆயிற்று.

## மதுரைக் காஞ்சி

### குறு வினா

**1.'மதுரைக்காஞ்சி' - பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.**

மதுரையின் சிறப்பு,வாழ்க்கை நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி என்ற பெயர் ஏற்பட்டது.

### சிறுவினா

**1."மாகால் எடுத்த முந்நீர் போல"- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

இடம்சுட்டல்:

இவ்வடி மதுரைக்காஞ்சி நூலில் இடம்பெற்றுள்ளன.

பொருள் விளக்கம்:

விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடல் ஒலி போல் ஒலிக்கின்றது.

## சந்தை

**1.எங்கள் ஊர்ச்சந்தை என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.**

எங்கள் ஊர்ச்சந்தை

- ❖ எங்கள் ஊரில் ஞாயிற்றுக் கிழமை நடக்கும் சந்தை மிகவும் புகழ்பெற்றது.
- ❖ இங்கு ஊசி முதல் பெரிய பானை வரை எல்லாப் பொருட்களும் உள்ளன.
- ❖ கீரைகள்,தானியங்கள்,பயறு வகைகள் தனித்தனியே விற்கப்படுகின்றன.
- ❖ இயற்கை காய்கறிகள் ,பழங்கள் விற்கப்படுகின்றன.

பூக்களும் , வாசனைப் பொருட்கள் விற்கப்படுகின்றன. அதனை வாங்கும் மக்கள் கூட்டம் அதிகம். கரும்புச் சாறும் , பலாப்பழமும் சந்தையில் வாசைன வீசின.

மாலை 3 மணி முதல் இரவு 10 மணிவரை சந்தைநடைபெறுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

### ஆகுபெயர்
### சிறு வினா

**1.பண்பாகுபெயர் , தொழிலாகு பெயர் – விளக்குக.**

பண்புப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது பண்பாகு பெயர் எனப்படும்.

சான்று : மஞ்சள் பூசினாள்

தொழிலின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது தொழிலாகு பெயர் எனப்படும்.

சான்று : வற்றல் தின்றான்.

## இயல்- 8
## பெரியாரின் சிந்தனைகள்
### குறு வினா

1.பகுத்தறிவு என்றால் என்ன?

அறிவியல் முறையில் அறிவின் வழி முடிவெடுப்பது பகுத்தறிவு ஆகும்.

2.பெரியார் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப் படுகிறார்?

வெண்தாடிவேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம்.

3.பெரியார் எவற்றையெல்லாம் எதிர்த்தார்?

இந்தித் திணிப்பு ,கள்ளுண்ணல், குலக்கல்வித்திட்டம்,குழந்தைத்திருமணம், தேவதாசி முறை, மணக்கொடை.

4.தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ் என்று அழைக்கப்படுபவர் யார்?

தந்தை பெரியார். யுனெஸ்கோ வழங்கியது.

### சிறு வினா விடை

1.சிக்கனம் குறித்து பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.

- ❖ விழாக்கள் , சடங்குகள் வேண்டாம்.
- ❖ இன்று விழாவுக்கும் திருமணத்திற்கும் கடன் வாங்கித் துன்பப்படுகின்றனர்.

### நெடு வினா

1.மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.

- ❖ இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ற நூல்களை தமிழில் எழுத வேண்டும்.
- ❖ பழைய எழுத்து முறைகள் அச்சுக் கோர்ப்பதற்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தியது.
- ❖ அவற்றைப் போக்க எழுத்துச்சீர் திருத்தம் செய்தார்.
- ❖ பகுத்தறிவு தன்மைகளை உண்டாக்க வேண்டும்.
- ❖ ஐ என்பதை அய் எனவும், ஔ என்பதை அவ் எனவும் சீரமைத்தார்.

### ஒளியின் அழைப்பு
### குறுவினா

1.கமுகு மரம் எதனைத் தேடியது?

கமுகு மரம் கதிரவன் உயிர்ப்பைத் தேடியது.

### சிறு வினா

1.அதுவே வாழ்க்கைப் போர் – எது?

கமுகு மரம், பெருமரத்தின் நிழல் என்னும் இருளைத் துளைத்து நின்றது.அது கதிரவன் உயிர்ப்பைத தேடியது. அது பெருமரத்தின் நிழலை வெறுத்தது, கிளையை மேலே உயர்த்தி நின்றது.ஒளியை வேண்டிக் கமுகு மரம் பெருமரத்துடன் போட்டி போடக் காரணம் ஆகும்.இதுவே வாழ்க்கைப் போர்.

### நெடுவினா

1.வாழ்க்கைப் போரில் வெற்றிபெறுவதற்கான வழிகளைக் கமுகு மரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

- ❖ கமுகு மரம், பெருமரத்தின் நிழல் என்னும் இருளைத் துளைத்து நின்றது.
- ❖ அது கதிரவன் ஒளியைத் தேடியது.
- ❖ அது பெருமரத்தின் நிழலை வெறுத்தது, கிளையை மேலே உயர்த்தி நின்றது.
- ❖ ஒளியை வேண்டிக் கமுகு மரம் பெருமரத்துடன் போட்டி போடக் காரணம் ஆகும்.
- ❖ இதுவே வாழ்க்கைப் போர்.கமுகு மரம் பெருமரத்துடன் போராடி வென்றது.
- ❖ பெருமரத்தை விட வளர்ச்சி நடை போடுகிறது.
- ❖ அதுபோலவே வாழ்க்கைப் போரில் செயல்பட்டால் வெற்றிபெறலாம்.

### தாவோ தே ஜிங்

1.தாவோ தே ஜிங் ‘ இன்னொரு பக்கம் ‘ என்று எதைக் குறிப்பிடுகிறார்? (குறுவினா)

வெற்றிடமே பயன்படுகின்றது என்பதை இன்னொரு பக்கம் என்று குறிப்பிடுகிறார்.

### யசோதர காவியம்
குறுவினா

1.யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

அவந்தி நாட்டு மன்னன் யசோதரன்.

சிறு வினா

1.நாம் கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை ?

- ❖ செயலைச் செய்வதென்றால் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும்.
- ❖ தீய பண்புகளை நீக்க வேண்டுமாயின் முதலில் கோபத்தை நீக்க வேண்டும்.
- ❖ ஆராய வேண்டுமானால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்.
- ❖ போற்றிக் காக்க வேண்டுமென்றால் நன்னெறியினைக் காக்க வேண்டும்.

2.யசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறியைத் திருக்குறளுடன் ஒப்பிடுக.

நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்க வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்க வேண்டும்.திருக்குறளில் வெகுளாமை அதிகாரத்தில் சினத்தை நீக்க வேண்டும் என்கின்றது.

3.பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களைக் குறிப்பிடுக.

சூளாமணி,பெருங்கதை,வில்லிபாரதம்,கம்பராமாயணம்

### மகனுக்கு எழுதிய கடிதம்

**மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டிருக்கும் தன் மகனுக்கு நா.முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச்செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை**

கவிஞர் நா.முத்துக்குமார் அவர்கள் தன் மகனுக்கு எழுதிய கடிதத்தின் கருத்துகளைக் காண்போம்.

**கடிதக் கருத்துகள்**

- ❖ உலகம் இப்படித்தான் அழ,சிரிக்க,,சிணுங்க வேண்டும் என்பதை உனக்குக் கற்பிக்கிகின்றது.
- ❖ வாழ்க்கையில் விழ வேண்டும்.பிறகு எழ வேண்டும். வாழ்க்கை முழுக்க இந்த நாடகத்தைத் தான் நீ வெவ்வேறு வடிவத்தில் நடிக்க வேண்டும்.

- கல்வியில் தேர்ச்சி கொள்.அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக் கொள்.தீயைப் படித்துத் தெரிந்து கொள்வதை விட , தீண்டிக் காயம் பெறு. அந்த அனுபவம் எப்போதும் சுட்டுக்கொண்டே இருக்கும்.
- மாநகரத்தில் வாழும் நீ கொடிய பல தேள் பல வடிவத்தில் இருக்கும்.அவற்றின் மத்தியில் வாழக் கற்றுக்கொள்.
- கிடைத்த வேலையை விட , பிடித்த வேலையைச் செய். கடன் வாங்கியாவது உதவி செய்.அதில் கிடைக்கும் மகிழ்ச்சி அதிகமானது.
- எல்லா உறவுகளையும் விட மேலானது நட்பு மட்டுமே , நல்ல நண்பர்களைச் சேர்த்துக் கொள். உன் வாழ்க்கை நேராகும்.

**முடிவுரை**

எதிர்காலத்தில் உன் கண்ணீர் துளியில் வாழ்ந்து கொண்டு இருப்பேன் நான் என்று கடிதத்தை நிறைவு செய்கிறார் நா.முத்துகுமார்.

## யாப்பிலக்கணம்

1.அசை எத்தனை வகைப்படும்?

அசை நேரசை,நிரையசை என இருவகைப்படும்.

2.யாப்பின் உறுப்புகள் யாவை?

யாப்பின் உறுப்புகள் : 6.

எழுத்து, அசை , சீர் , தளை , அடி , தொடை

3.ஈரசைச்சீருக்குரிய வாய்ப்பாடுகள் யாவை?

1.நேர் நேர் - தேமா 2.நிரை நேர் - புளிமா ,

3.நேர் நிரை -கூவிளம் 4.நிரை நிரை - கருவிளம்

## இயல் -9

### விரிவாகும் ஆளுமை

### குறு வினா

1.தமிழ்ச்சான்றோர்க்கும் உரோமையரின் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?

தமிழ்ச்சான்றோன் சமுதாயத்திற்குப் பல நன்மைகள் செய்வான்.ஆனால்,உரோமையரின் சான்றோர் தன் சொந்தப் பண்புகளையே வளர்ப்பான்.

### சிறுவினா

1.உலக இலக்கியத்தில் காண இயலாத அரிய கருத்துக்களாக ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடுவன யாவை?

- மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள்.அவர்களைத் தாழ்த்தவோ உயர்த்தவோ முடியாது. இத்தகைய அரிய கொள்கையைத் தமிழ் மக்கள் கடைபிடித்திருந்தனர் என்னும் உண்மை பெரும் வியப்பைத் தருகின்றது.
- திருக்குறளைப் பற்றி ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடும் போது "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பதரிது" என்பார்.

2.கோர்டன் ஆல்பர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.

- முதலாவது மனிதன் , தன் ஈடுபாடுகளை வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும்.பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் பாடுபடக் கூடிய வகையில் தன் ஆளுமையை விரிவடையச்செய்து செழுமைப்படுத்தவேண்டும்.
- இரண்டாவது ஒருவன் பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறானோ அதை அறிந்து தெதள்ளும் ஆற்றல் படைத்தவனாக இருத்தல் வேண்டும்.
- மூன்றாவதாக அவனது வாழ்க்கைக்குச் சுய ஓர்மையைத் தரும் தத்துவத்தைக் கடைபிடித்து நடத்தல் வேண்டும்.

### நெடு வினா

**1.தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைக் கருத்துகளைத் தனிநாயக அடிகளார் வழி விளக்குக.**

- உலகநாடுகளையும் மக்களையும் உட்படுத்தி பாராட்டுவது நம் இயல்பு. அதனையே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூறு வரி கூறுகின்றன.
- மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள் ஒரு பிறப்போ , சாதியோ , சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ உயர்த்தவோ முடியாது.
- இத்தகைய அரிய கொள்கையைத் தமிழ் மக்கள் கடைபிடித்திருந்தனர் என்னும் உண்மை பெரும் வியப்பைத் தருகின்றது.
- திருக்குறளைப் பற்றி ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடும் போது " இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பதரிது" என்பார்.

### அக்கறை

### சிறுவினா

1.பழங்களை விடவும் நசுங்கிப் போனது - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

இடம்:

அக்கறை கவிதையில் இவ்வரிகள் இடம்பெற்றுள்ளது.

பொருள் விளக்கம்:

பழங்களை விடவும் நசுங்கிப் போனது எது என்றால் மற்ற மனிதர்கள் மீது அக்கறை இல்லாததால் தான் என்கிறார் கல்யாண்ஜி.

2.மணல் விளையாட்டு என்னும் தலைப்பில் சிறு கவிதை படைக்க.

**சின்ன வயதில் சின்ன சின்ன**
**ஆசைகளோடு சிறுவீடு கட்டினோம்**
**சிதையும் என்று தெரிந்தும்**
**தொடர்ந்து கட்டிக்கொண்டே இருப்போம்**
**என்றாவது ஒரு நாள்**
**அது சிதையாது என்று..**

### குறுந்தொகை

குறு வினா

1.பிடி பசி களைஇய பெருங்கைவேழம் - இவ்வடியில் உள்ள இலக்கணக்குறிப்பைக் கண்டறிக.

1.பிடிபசி - ஆறாம் வேற்றுமைத்தொகை.
2.களைஇய - சொல்லிசையளபெடை
3.பெருங்கை - பண்புத்தொகை

2.குறுந்தொகை - பெயர்க்காரணம் கூறுக.

குறுகிய பாடல்களின் தொகுப்பு குறுந்தொகை. 4 அடி முதல் 8 அடி வரை உள்ள செய்யுட்கள் தொகுப்பு அதனால் குறுந்தொகை என்று பெயர் வைத்தனர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**சிறு வினா**

1.'யா' மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக விளக்குக?

ஆண்யானை 'யா' மரத்தின் பட்டையை உரித்தது.

உட்கருத்து: மேற்கண்ட காட்சியைக் கண்ணுற்ற தலைவனுக்கு உன் நினைவு வரும்.எனவே அவன் உன்னிடம் விரைந்து வருவான்.

தாய்மைக்கு வறட்சி இல்லை

முன்னுரை

தாய்மை வறட்சி இல்லை பற்றி இக்கதை விளக்குகிறது.

ஏழைக்குடும்பம்

- நெடுஞ்சாலையில் தோட்டம் ஒன்று இருந்தது அங்கு குடிசையில் கணவன் ,மனைவி , இரண்டு குழந்தைகள் மற்றும் இரண்டு நாய்க்குட்டிகள் வாழ்ந்தன.

அதிகாரிகள்

- அதற்கு பக்கத்தில் உள்ள இடத்தில் அடிக்கடி அதிகாரிகள் வந்து தங்கிவிட்டுச் செல்வார்கள்.
- இவர்கள் குடும்பம் தான் அவர்களுக்கு உதவி செய்வார்கள்.
- அவர்கள் கொடுப்பதை வாங்கிக் கொள்வார்கள்.

மீதி பிரியாணி

- ஒரு நாள் அதிகாரிகள் சாப்பிட்டு விட்டு மீதி பிரியாணியையும் முட்டையும் தோட்டக்காரனிடம் கொடுத்தனர்.
- மனைவிக்கு எச்சி சாப்பாட்டை வாங்குவது பிடிக்கவில்லை.
- இருந்தாலும் வறுமை காரணமாக அதை வாங்கிக் குழந்தைகளுக்குக் கொடுத்தாள்.
- தான் உண்ணாமல் நாய் குட்டிகளுக்கு மீதியைக் கொடுத்தாள்.

முடிவுரை

பசியிலும் தான் உண்ணாமல்,நாய்க்கும் உணவு தந்த தாய் சிறந்தவள்.

## அணி இலக்கணம்

**குறு வினா**

1.நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன் - இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.

கவித்தேன் , சுவைத்தேன்

**சிறு வினா**

1.உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**இலக்கணம்:** உவமையின் தன்மையைப் பொருள் மீது ஏற்றிக் கூறுவது உருவக அணி ஆகும்.

**சான்று:** "இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக.."

**விளக்கம்:** இன்சொல் - நிலமாக உருவகப்படுத்தப்பட்டது. எனவே .இவ்வடி உருவக அணியாயிற்று.

# கடிதம்,கட்டுரை,அறிக்கைகள்

## நூல் மதிப்புரை

நீங்கள் விரும்பி படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக

நூலின்:பெரியாரின் பெண்ணிய கனவுகள்

நூலாசிரியர்: ச. சேட்டு மதார்ஷா

வெளியீடு : விஜயா பதிப்பகம், கோவை.

- பெண்ணுரிமைக்காக பெரியார் சொன்ன கருத்துக்களை தனியே கூறும் சிறந்த நூல் இது.
- பெண்ணுரிமைக்காக பெரியார் கூறிய கருத்துகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அழகாக இந்நூல் காட்டுகிறது.
- பெரியாரின் பெண்ணிய கனவுகள் இன்று நனவாகிக் கொண்டுவருவதை நல்ல முறையில் இந்த நூல் எடுத்துக் கூறியுள்ளது.
- ஒருவொரும் அவசியம் இந்த நூலைப் படிக்க வேண்டும்.

## வரவேற்பு மடல்

தமிழறிஞரே!

அன்பானவரே! அறிவானவரே! பண்பானவரே! சிறந்த தலைவரே!இன்றைய வள்ளுவராக வாழ்பவரே! வருக! வருக!

நேர்மையானவரே!

உண்மைக்கும் உழைப்புக்கும் சான்றானவரே! நேர்மையின் மறு உருவமாக இருப்பவரே!துயு தங்கம் போன்றவரே! வருக! வருக!

சிந்திக்க வைப்பவரே!

பேச்சால் சிரிக்க மட்டும் அல்ல, சிந்திக்க வைப்பவரே!நீங்கள் அனைவருக்கும் வழிகாட்டி! வருக! வருக!

நாள் : இப்படிக்கு

இடம் : ஈரோடு இலக்கிய மன்ற செயலாளர்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## நண்பனுக்குக் கடிதம்

உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் கால் முளைத்த கதைகள் என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக

24, தமிழ் நகர்,
ஈரோடு,
நாள்:

அன்புள்ள நண்பனுக்கு

உன் நண்பன் எழுதும் கடிதம். நலம் நலம் அறிய ஆவல். நீ அனுப்பிய பிறந்த நாள் வாழ்த்தும் பிறந்தநாள் பரிசாக புத்தகமும் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். நூலைப் படித்துப் பார்த்தேன். தன்னம்பிக்கையை வளர்க்கும் விதமாக கதைகள் ஒவ்வொன்றும் அமைந்திருந்தது. நீயும் அந்தப் புத்தகத்தைப் படித்துப் பார். மற்றவை நேரில்.

இப்படிக்கு
-----

உறைமேல் முகவரி

| |
|---|
| பெறுநர்<br>ரகு<br>10,பாரதி நகர்<br>மதுரை – 6. |

உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

| ஈ.கே.எம்.அ.க.மதரஸாஇஸ்லாமிய உயர்நிலைப்பள்ளி |
|---|
| **உலகத் தாய்மொழி நாள் விழா** |
| **நாள் :21.2.2022 நிகழ்விடம் : கலையரங்கம்** |
| **நிகழ்ச்சி நிரல்**<br>**தமிழ்த்தாய் வாழ்த்து**<br>**வரவேற்புரை : த.கண்ணன் 9-ஈ**<br>**தலைமையுரை : தலைமையாசிரியர்**<br>**சிறப்புரை : கவிஞர் வைரமுத்து அவர்கள்**<br>**நன்றியுரை : பாபு 10-அ**<br>**நாட்டுப்பண்** |

## தொகுப்புரை எழுதுக

பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளை திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

- தமிழ்த்தாய் வாழ்த்துடன் இலக்கிய மன்ற விழா காலை 9 மணியளவில் தொடங்கியது.
- தலைமை ஆசிரியர் தலைமை ஏற்று தலைமை உரை வழங்கினார்.
- அவர் தலைமை உரை வழங்கும் பொழுது மாணவர்கள் அனைவரும் கடின உழைப்பும் தன்னம்பிக்கையோடும் படிக்க வேண்டும் என்றார்.
- ஒன்பதாம் வகுப்பு மாணவர் 'முயற்சி' என்னும் தலைப்பில் சிற்றுரை வழங்கினார். பேச்சுப்போட்டி –கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.
- பத்தாம் வகுப்பு மாணவர் தமிழரசன் நன்றியுரை வழங்க நாட்டுப் பண்ணுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

## பதிப்பகக் கடிதம்

**உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் –தமிழ்–ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.**

அனுப்புனர்
------,(பெயர்)
10,பாரதி நகர்,
------------(ஊர்)

பெறுனர்
நெய்தல் பதிப்பகம்
சென்னை –5

ஐயா,

பொருள் : அகராதிகள் வாங்குதல் தொடர்பாக..

வணக்கம். **எங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ்–ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு** கேட்டுக்கொள்கின்றேன்.உரிய பணத்தினை வங்கியில் செலுத்தியுள்ளேன்.அதன் நகல் இணைத்துள்ளேன்.நன்றி!

இடம்: இப்படிக்கு,
நாள்: -------(பெயர்)

உறைமேல் முகவரி
பெறுனர்
நெய்தல் பதிப்பகம்
சென்னை –5

## பொதுக்கட்டுரை
## மழைநீர் சேமிப்பு

முன்னுரை

மழைநீர் சேமிப்பு பற்றியும், இதன் பயன்கள், சேகரிக்கும் முறை பற்றியும் இனிக் காண்போம்.

மழைநீர் சேமிப்பு

மேகம் மழை பொழிந்து நீரை நமக்குக் கொடுக்கிறது.அந்த நீரை நாம் சேமிக்க வேண்டும்.அதுவே மழைநீர் சேமிப்பு எனப்படும்.

சேமிக்கும் முறை

1.வீட்டின் மீது விழும் மழைநீரைக் குழாய்கள் மூலம் மழைநீர் சேமிப்புத் தொட்டியில் சேகரிக்கலாம்.

2.ஏரி , குளம் , கிணறு ஆகியவற்றில் மழைநீரைச் சேமிக்கலாம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

பயன்கள்

குடிநீராகப் பயன்படும்.
நிலத்தடி நீர் மட்டம் உயரும்.
வறட்சி குறையும்.

மரம் வளர்ப்போம்

1.மரத்தை வெட்டுவதால் மழை குறைகிறது.
2.எனவே, நாம் மரத்தை வெட்டக் கூடாது.
3.மழை அதிகமாக நாம் மரம் வளர்க்க வேண்டும்.
4.நாம் ஒவ்வொருவரும் வீட்டிற்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும்.

முடிவுரை

அனைவரும் மழைநீரைச் சேமிப்போம்! அனைவரும் மரம் வளர்ப்போம்!

## நூலகம்

**முன்னுரை**

**நூலகத்தைப் பயன்படுத்தும் முன் நூலகத்தைப் பற்றி தெரிந்து கொள்வோம்.**

**நூலகத்தின் தேவை**

**பொழுதைப் பயனுள்ள வகையில் கழிக்கவும் நூல்களை இலவசமாகப் படிக்கவும் குறிப்பெடுக்கவும் நூலகம் தேவைப்பட்டது.**

**வகைகள்**

**மாவட்ட மைய நூலகம், மாவட்ட கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம் ,எனப் பலவகை நூலகங்கள் உள்ளன.**

**நூலகத்தில் உள்ளவை**

**கதை ,கவிதை, கட்டுரை , அறிவியல் நூல்கள், வார இதழ்கள் ,மாத இதழ்கள் ஆகியவை நூலகத்தில் உள்ளன.**

**படிக்கும் முறை**

**நூலகத்தில் நூல்களை எடுத்து அமைதியாகப் படிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் படிக்க அமர்ந்து வேண்டும். நூல்களைக் கிழிக்கவோ, சேதப்படுத்துவதோ கூடாது .**

**முடிவுரை**

**நூலகம் தேடிச் சென்று, நாடி நூல்களைப் படிப்போம் உயர்வோம்.**

## பெண்கல்வி (அல்லது) பெண்கள் முன்னேற்றம்

முன்னுரை

“மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா “ என்றார் கவிமணி. அத்தகைய சிறப்பு மிக்க இனம் பெண்ணினம்.

**பெண்ணின் சிறப்பு**

மொழி , நாடு , மண் , ஆறு , இறைவன் ஆகிய அனைத்தும் பெண்கள்.பாரதியும் , பாரதிதாசனும் , பெரியாரும் போற்றிய பெருமைக்குரியவள் பெண்.

**பெண்ணடிமை**

அச்சம் , மடம் , நாணம் , பயிர்ப்பு ஆகிய நான்கும் பெண்ணுக்குரியது என்று கூறி பெண்ணை அடிமைப்படுத்தினர்.சமைப்பதும் , குழந்தை பெறுவதும் பெண்ணுக்குரியதாய் கூறி அடிமைப்படுத்தினர்.

**பெண்கல்வி**

ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்றார் பாரதி. பெண்கட்கு கல்வி வேண்டும் என்றார் பாரதிதாசன். திரு.வி.க., காந்தியடிகள் , பெரியார் ஆகியயோர் பெண்கல்விக்குக் குரல் கொடுத்தனர்.

**பெண் முன்னேற்றம்**

இந்திரா காந்தி , அன்னை தெரஸா ,கிரண்பேடி , கல்பனா சாவ்லா , சுனிதா வில்லியம்ஸ் , பாத்திமா பீவி ஆகிய பெண்கள் கல்வியால் சிறந்து பெருமை பெற்ற பெண்கள்.

**முடிவுரை**

இன்று பெண்கல்வி வளர்ந்து வருகின்றது. பெண்கள் கல்லாத நிலை இல்லை என்பது உருவாக வேண்டும்.

**“எனது பயணம்” என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.**

**முன்னுரை**

எனது பயண அனுபவம் பற்றிய சுவையான செய்திகளைத் தருகின்றேன்.

**தொடர் வண்டிப்பயணம்**

ஈரோட்டில் தொடர் வண்டி நிலையத்திலிருந்து கோவை அதிவிரைவு வண்டியில் கிளம்பினோம். சேலம் , திருபத்தூர் , வாணியம்பாடி , அரக்கோணம் ஆகிய ஊர்களை எல்லாம் வண்டி கடந்து வந்தது.மரங்களும் மலைகளும் வேகமாக ஓடின.

**சென்னை**

சென்னையில் இறங்கி வள்ளுவர் கோட்டம் சென்றோம்.பிறகு மெரினா கடற்கரை சென்றோம்.கடலின் காட்சி கவின்மிகு காட்சியாக இருந்தது.பிறகு கன்னிமாரா நூலகம் சென்றோம். மாமல்லபுரம் சென்றோம். சிற்பங்களின் கலையழகில் மூழ்கினேன்.

**திரும்புதல்**

மீண்டும் தொடர் வண்டி மூலம் அடுத்த நாள் இரவு ஈரோடு வந்தோம்.

## பலவுள் தெரிக.

### இயல் –1

**1.காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்த காலமும் நிலையாய் இருப்பது தமிழே! – இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்**

**விடை: இ.மோனை . எதுகை, இயைபு**

**2.தமிழ்விடு தூது ------என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.**

**விடை: இ.சிற்றிலக்கியம்**

**3.விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.**

**அ.---------------இனம் ஆ.வண்ணம்-----------**

**இ.----------------குணம் ஈ.வனப்பு**

**விடை: க)மூன்று,நூறு,பத்து,எட்டு**

4.அழியா வனப்பு , ஒழியா வனப்பு,சிந்தாமணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு

விடை: ஆ.ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

5.குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்தெடுக்க.

| குழு -1 | குழு -2 | குழு -3 | குழு - 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன் வினை |
| ------- | -------- | ---------- | -------- |
| தோணி | மர | விருத்தம் | காரணவினை |

விடை: அ.1-வங்கம் , 2-மானு , 3-தாழிசை 4- பிறவினை

## இயல் -2

1.“மிசை” – என்பதன் எதிர்ச்சொல் என்ன ?

விடை ஆ) மேலே

2.நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது ?

விடைஈ) புலரி

3.பொருத்தமான விடையைத் தேர்க.

அ.நீரின்று அமையாது உலகு - திருவள்ளுவர்

ஆ.நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்

இ.மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்

விடை க) அ, இ

4.பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.

கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ---------

அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ------

விடை ஆ) வந்துவிட்டான், வரவில்லை

5.மல்லல் மூதூர் வயவேந்தே- கோடிட்ட சொல்லின் பொருள் என்ன? விடை இ) வளம்

## இயல் -3

1.பொருந்தாத இணை எது?

விடை ஆ) திருவாரூர் – கரிக்கையூர்

2.முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.

விடை

ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.

3.பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று –

விடை

இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

4.ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

விடை ஈ) தொகைச்சொற்கள்

5. சொற்றொடர்களை முறைப்படுத்துக.

அ) ஏறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி

இ) தழுவிப் பிடித்தல் என்கிறது

விடை 1)ஆ – அ - இ

## இயல் -4

1.கீழ்க்காணும் மூன்று தொடர்களுள் -

அ) இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப் பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும்.

ஆ) வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண், வங்கிக் கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்துதல் இயலாது.

இ) திறன் அட்டைகள் என்பவை குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டனவாகும்.

விடை 2) அ, இ ஆகியன சரி, ஆ தவறு

2. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

விடை ஆ) ஊரகத் திறனறித் தேர்வு

3. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே

இரண்டறிவதுவே அதனொடு நாவே

இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?

விடை ஆ) தொடு உணர்வு

4. பின்வரும் தொடர்களைப் படித்து ‘நான்’ யார் என்று கண்டுபிடிக்க.

அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்

எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்

இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்

விடை ஆ) தமிழ்

5. விடை வரிசையைத் தேர்க.

அ) இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்.

ஆ) இது கடல்பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி.

விடை க) நேவிக், சித்தாரா

## இயல் -5

1. பொருத்தமான விடையைத் தேர்க.

அ)சிறுபஞ்சமூலம் - 1. காப்பிய இலக்கியம்

ஆ)குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்

இ)சீவகசிந்தாமணி - 3. அற இலக்கியம்

ஈ)குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்.

விடை (க) அ-3, ஆ- 4, இ -1, ஈ- 2

2. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.

விடை ஈ)இன்,கூட,கிறு,அம்பு

3. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?

விடை

இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!

4. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

அ) ‘ஆ’ என்பது எதிர்மறை இடைநிலை.

ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.

இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.

விடை 3. மூன்றும் சரி

5. பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

விடை ஈ) எதிர்மறை வினையெச்சம்

## இயல் -6

1. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று

விடை அ) மாமல்லபுரம்

2. 'பொதுவர்கள் பொலிஉறப் போர்அடித்திடும்' நிலப் பகுதி விடை இ) முல்லை

3. மரவேர் என்பது ---புணர்ச்சிவிடை ஈ) கெடுதல்

4.’அதிரப் புகுதக் கனாக் கண்டேன்’ -யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?

விடை

ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

5) திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை

விடைஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்

இயல் -7

1.இந்திய தேசிய இராணுவம் ..............இன் தலைமையில் ................. உருவாக்கினர்..

விடை இ) மோகன்சிங், ஜப்பானியர்

2.சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

விடை இ) அள்ளல் – சேறு

3.இளங்கமுகு, செய்கோலம் – இலக்கணக்குறிப்புத் தருக.

விடை ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை

4.நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு - இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,

விடை இ) சேர நாடு, சோழ நாடு

5. வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?

விடை அ. மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்

6.கூற்று - இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்றார்.

காரணம் - இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்.

விடை அ) கூற்று சரி, காரணம் சரி

இயல்-8

1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

கூற்று - பெரியார் உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.

காரணம் – சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.

விடை ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

2.காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது - இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது?

விடை ஈ)பிறப்பு

3. முண்டி மோதும் துணிவே இன்பம் – இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது

விடை இ) துணிவு

4. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.

விடை – பானையின் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.

விடை அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?

5.'ஞானம்' என்பதன் பொருள் யாது?

விடை ஈ) அறிவு

இயல்-9

1. இமயத்துக் கோடு உயர்ந்தன்ன – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

விடை ஆ) மலையுச்சி

2. தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை

விடை ஈ) ஒன்றே உலகம்

3. வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுத் தந்த நூல்

விடை அ) ஒரு சிறு இசை

4. யா மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?

விடை இ) பாலை

5. கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை – இக்குறளில் பயின்று வந்துள்ள அணி?

விடை ஆ) பொருள் பின்வருநிலையணி

ஆக்கம்

ச.சேட்டு மதார்சா,ப.ஆ.

ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,ஈரோடு.

அலைபேசி-8883681115



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com